காவிய கானங்கள் கேட்கும் வீரர்
கால்களில் வேகங்கள் சேரும் 2
காவிய கானங்கள் கேட்கும்

ஆ ஆ ஆ ஆ
ஆ ஆ ஆ ஆ

வீர வேங்கைகள் மூச்சில் புலிக்கொடி வீசி விடுதலை பாடும் 2
வீசி விடுததை பாடும் வேகம் எனக் காற்றில் ஆடும்
பெரும் தடைகள் வருகின்ற வேளை பொழுதும்
துணிவுடன் வேங்கைகள் பாயும்
எதிரி கலங்கிட எல்லைகள் வீழும் ம் ம் ம்

காவிய கானங்கள் கேட்கும் வீரர்
கால்களில் வேகங்கள் சேரும் 2
காவிய கானங்கள் கேட்கும்

வீசி வருகின்ற காற்றில் விரிகின்ற வாச மலர்களின் வேகம்
வாச மலர்களின் வேகம் எம் வீரர் குருதியில் ஊறும்
வீரர் விழுகின்ற வேளை பொழுதும்
வேறுடல் வீதிகள் போர்க்கும் எம்
வீரர் அணிநடை கேட்கும் ம் ம்

காவிய கானங்கள் கேட்கும் வீரர்
கால்களில் வேகங்கள் சேரும் 2
காவிய கானங்கள் கேட்கும்

அஞ்சி மடிந்திடா நெஞ்சில் என்றும் குண்டு சுமந்தவர் வீரர் 2
குண்டு சுமந்தவர் வீரர் திடம் கொண்டு துணிந்தவர் ஆறும்
பெரும் தடைகள் வருகின்ற வேளைப் பொழுதும்
வேள்விகள் ஆயிரம் காணும்
புல வெற்றி விருதுகள் பூணும் ம் ம்

காவிய கானங்கள் கேட்கும் வீரர்
கால்களில் வேகங்கள் சேரும் 2

காவிய கானங்கள் கேட்கும் 2